திரு. த. சோனேயா : கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் இவற்றை போட்டி போட்டுக்கொண்டு ஏலம் கேட்கிறார்கள். அப்படி ஏலம் கேட்பவர்கள் கடைசியில் ஏலத்தொகையை கட்டுவ தற்குப் பணம் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். எனவே அப்படிப் பட்டவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது சலுகை அளிக்க முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டிக் கேளுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will the Hon. Minister for Revenue be pleased to say how many shops—Arrack Shops and Toddy Shops—are situated in each Panchayat Union?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sorry, Sir; I do not have the figures now.

திரு. ஜே. ஜேம்ஸ் : பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த வருவாயில் ஒரு பகுதியைக் கொடுப்பதால் இப்போது அதிகமாகயிருக்கிற கள்ளச்சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதற்கு அதை மேற்பார்வை செய்ய அனுகூலமாகயிருக்குமே. எனவே, அதை ஆலோசித்தாவது இதுபற்றி முடிவு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதற்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சலுகைகள் கோருவதற்குப் பதிலாக நம் தமிழ்நாட்டில் ஏதாவது பஞ்சாயத்துக்கள் இப்படிப் பட்ட மதுக்கடைகளை அவர்களது எல்லைக்குள் இருக்க வேண்டாம் என்று விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளனவா? அது குறித்து அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றிய விவரம் என்னிடம் இப்போது இல்லை .

திரு. நா. வே. குருசாமி : சில ஊராட்சிமன்றங்கள் வருவாய்க் குறைவு காரணமாக மின்சாரக் கட்டணம்கூட செலுத்த முடியாத நிலையில் உள்ளன. எனவே மதுவிலக்கு ரத்து செய்திருப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு பகுதியை அந்தப் பஞ்சாயத் துக்களுக்குக் கொடுத்தால் அது நல்ல முறையில் நடவடிக்கைகள் எடுக்கமுடியுமே, அதைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா?

1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்படிப்பட்ட விண்ணப்பங்கள் வந்தவுடன் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களேயும், முதல் அமைச்சர் அவர்களேயும் கலந்துகொண்டு அப்படிக் கொடுப்பது தேவையில்லை என்று அரசாங்கம் முடிவு எடுத்துவிட்டது என்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

கள்ளச் சாராயம் தயாரிப்பு

*130. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுவிலக்கு தள்ளி வைக்கப்பட்டதற்குப் பிறகு, கள்ளத்தனமாக மது தயாரித்ததாக யாரேனும் கைது செய்யப்பட்டனரா?

(இ) அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) செப்டம்பர் 1971லிருந்து டிசம்பர் 1972 வரை கள்ளத்தனமாக மது தயாரித்ததாக 11,674 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 8,893 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டன. 1,046 வழக்குகள் தள்ளப்பட்டன. மற்றவை புலனுய்விலும், கண்டு பிடிக்கப்படாமலும் உள்ளன.

திரு. என். கிட்டப்பா : இந்த மதுவிலக்கைத் தாற்காலிகமாக ஒத்திவைத்த பிறகு கள்ளச்சாராயம் காய்ச்சுவது குறிப்பாக, சாராயம் காய்ச்சுவது கிராமப்புறங்களில் அதிகரித்து உண்மைச் சாராயத்தோடு அதைக் கலந்து விற்கின்ற சூழ்நிலை பலயிடங்களில் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே அதைப் பரிசோதித்து அத்தகைய முறையில் வியாபாரம் நடத்தக்கூடியவர்களுக்குத் தண்டனை விதிக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படியும் பல வழக்குகள் பிடித்து வழக்குகளை நீதிமன்றத்தில் கொண்டுபோய் வைத்திருக்கிறோம். சிலர் தண்டிக்கப்பட்டும் இருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுவிலக்கை ரத்து செய்த பிறகு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமான தொகைக்கு ஏலம் எடுத்திருப்பதால் இம்மாதிரி கள்ளச்சாராயத்தை உபயோகப்படுத்துகிறார்கள் என்று தெரியுமா? அப்படியானல் அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கயிருக்கிறார்கள்?

[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவலில் இருந்து கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறது. ஆனால் கள்ளச்சாராயத்தோடு இவற்றைக் கலந்து விற்கிறார்கள் என்ற புகார்கள் சிலயிடங்களில் வந்திருக்கின்றன. நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். பொதுவாக எங்கு கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறதோ அங்கிருந்து புகார்கள் வருமானால் அங்கிருக்கிற போலீஸ் ஒருவேளை நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டால் எனக்கோ, அல்லது டி.ஐ.ஜி.க்கோ அல்லது கமிஷனருக்கோ எழுதியனுப்பினால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : மதுவிலக்கு தள்ளிவைக்கப் பட்ட பிறகு சிலர் மது அருந்திவிட்டுப் பொதுயிடங்களில், தாறு மாறாக நடந்துகொள்கிறார்கள். அதைத் தடுக்க இச்சட்டத்தை திருத்தி அமைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்கு இப்போதே விதிகள் இருக்கின்றன. அப்படி நடந்துகொள்ளக் கூடாது. நடந்து கொண்டால் போலீஸார் நடவடிக்கை எடுப்பார்கள்.

மாயூரம்—மணல்மேடு சாலை

*131. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரத்திலிருந்து மாப்படுகை—திருமங்கலம்—ஆத்தூர் வழியாக மணல்மேடு செல்லும் சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : மாயூரத்திலிருந்து திருமங்கலம் ஆத்தூர் வரை செல்லும் சாலையை நெடுஞ்சாலைத் துறையில் சென்ற நிதி ஆண்டு ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. ஆனால் இதுவரை யிலும் புகார்கள் கொடுத்தும், நேரில் சொல்லியும் அந்தப் பாதை சீரமைக்கப்படாத காரணத்தினால் போக்குவரத்து தடைப்பட்டிருக் கிறது. அதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதை விரைவுபடுத்த அரசு ஆணையிட முன்வருமா?